# 'தடுமாறும் ததஜ(TNTJ)'

மண்டபம் M. அப்துல் காதிர்

"தூங்குபவனை எழுப்பி விடலாம், தூங்குவது போல் நடிப்பவனை எழுப்பி விட முடியாது" என்று சொல்வார்கள். இந்த நிலையில்தான் தவ்ஹீது(?) மௌலவி P.J. அவர்கள் தடுமாற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

தற்போது அவர் தானும் வழி தவறி, அவரை கண்மூடித்தனமாக பின்பற்றும் கூட்டத்தினரையும் தவறான வழிக்கு அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார்.

தடுமாறித் தவறான வழியில் செல்வததால் தான் அவரிடம் உடனிருந்த சில சிந்தனையாளர்கள் அவரை விட்டு விலகி உண்மை முஸ்லிம்களாக பிரிந்து செயல்படுவதை காண முடிகிறது.

அவரது தவறான செயல்பாட்டு முறையினால் தான் களியாக்காவிளையில் தோல்வியை தழுவினார். ஆனால் அங்கே தவ்ஹீது தோற்கவில்லை. அவரது போலி தவ்ஹீது(?) வேடம்! தோற்றுப் போனது. இப்பொழுது ஹஜ் பெருநாளை கொண்டாடும் மக்களை, குழப்பத்தில் ஆழ்த்தவும் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் தந்திரத்தையும் கையாண்டுள்ளார். ஹஜ் பெருநாள் வியாழக்கிழமை என்றும் புதன்கிழமை அரபா நாள் என்றும் ஓர் துண்டு பிரசுரம் அச்சடித்து சிந்தனையற்ற தன் தம்பிகள் மூலம் விநியோகம் செய்துள்ளதை காண முடிகிறது.

*அவர் கூறும் காரணம்!*

தமிழ்நாட்டில் இவர்கள் மட்டும்தான் மாதா மாதம் பிறை பார்க்கும் வழக்கம் கொண்டவர்களாம். அவ்வாறு இம்மாதம் பிறையை பார்க்கும் போது தமிழ்நாடு முழுவதும் மேக மூட்டமாக இருந்ததாம். ஆதலால் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளதின்படி மேக மூட்டமாக இருந்தால் அம்மாதத்தை 30 நாளாக ஆக்கி கொள்ளுங்கள் என்ற கூற்றின்படி செவ்வாய்கிழமையும் இல்லை, புதன்கிழமையும் இல்லை என்று கூறி "என் வழி தனி வழி" என்று வியாழக்கிழமை பெருநாள் என்று ஃபத்வா வழங்கியுள்ளார்.

''ஆண்டுகளின் எண்ணிக்கையையும், காலத்தின் கணக்கையும் நீங்கள் தெரிந்து கொள்வதற்காக சந்திரனை மாறி, மாறி தினமும் வர பல மனாஜில் களை உண்டாக்கினான். (10:5)

பிறையைப் பற்றி மக்கள் நம்மிடம் கேட்கிறார்கள். அவர்களிடம் கூறும்: மக்களுக்கு காலத்தையும், ஹஜ்ஜையும் அறிவிக்கக் கூடியது.

(2:189)

என்று அல்லாஹ் தன் நெறி நூலாம் அல்குர்ஆனில் கூறியுள்ளான். இவ்வசனம் அவருக்கு தெரியாமலில்லை. தவ்ஹீது சிந்தனையில் சகோதரர் அபூஅப்தில்லாஹ் அவர்களோடு இணைந்து பணியாற்றி, பிறகு வெளியேறி சகோதரர் S.K. அவர்களிடம் இணைந்து இருக்கும்போதெல்லாம் இந்த வசனங்கள் அவருக்கு பிறை என்பது நாட்காட்டிதான். உலகமெல்லாம் ஒரே பிறைதான் என்று எண்ணம் இருந்தது.

ஆனால் தற்போது தடுமாறி தடம் மாறி போனதால் இந்த வசனங்கள் அவரது இமைகளுக்கும், உள்ளத்திற்கும் பூட்டுபோட்டு விட்டன.

***ஹஜ்ஜின் கடமை மக்காவில் நிறைவேற்றப்படுகிறது. அரபா மைதானத்தில் ஹாஜிகள் பிறை 9வது நாள் கூடுகிறார்கள். 'அரபா தினத்தில் நோன்பு நோற்பது முந்தைய ஒரு வருடம், வரும் அடுத்த ஒரு வருடம் பாவங்களுக்கு பரிகாரமாகும்.***

*அபூ கதாதா(ரழி) நூல்: திர்மிதி, முஸ்லிம்.*

***அரபா நாளில் ஹாஜிகளை தவிர்த்து மற்றவர்களை நோன்பு வைக்க நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் பிறை 9 அரபா நாள், 10 அறுக்கக் கூடிய நாள், பிறை 11,12,13 அய்யாமுத் தஷ்ரீக் நாட்கள் முஸ்லிம்களுக்கு பெரிய மகிழ்வு தரும் நாள்களாகும். அவை உண்பதற்கும், பருகுவதற்கும் உரிய நாட்களாகும்.***

*உக்பா பின் அமீர் அலி(ரழி) நூல்:திர்மதி.*

இந்த ஹதீஸ்கள் P.J. க்கு தெரியாமல் இல்லை. ஆனால் 'தான்' என்ற மமதையில் செயல்படுவதால் குர்ஆன் வசனங்கள், ஹதீஸ்கள் அனைத்தும் அவரது சுய விளக்கத்துக்கு ஆளாகிவிட்டன. ஆதலால்தான் ஹாரூத்Zமாருத் என்ற இரண்டு மலக்குகளை. ஷைத்தானுக்கு ஒப்பிட்டும், முத்தஷாபிஹாத் வசனங்களின் விளக்கத்தை (முடிவான கருத்தை அல்ல) அல்லாஹ்வும் அறிவான்; அறிவிற் சிறந்தவர்களும் அறிவார்கள், என அல்லாஹ்வை மனித நிலைக்குத் தாழ்த்தியும், மனிதனை அல்லாஹ்வின் நிலைக்கு உயர்த்தியும் ஷிர்க், குஃப்ரிலாகி உலக அளவில் கண்டனத்திற்கு ஆளாக்கப்பட்டார். இன்னும் கண்டனங்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்.

தற்போது ஹஜ் பெருநாளின் ஃபத்வாவால்

அவரது உண்மை வேடம் கலையத் தொடங்கி விட்டது. 10,11,12,13 பிறை நாட்களில் உண் ணுங்கள், பருகுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறியிருந்தும் இவர் உண்ணாதீர்கள், பருகாதீர் கள் என்று கூறி நோன்பு வையுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் பொன்மொழிக்கு மாற்றமாக அறிவிப்பு செய்கிறார்.

இனிமேல் வரும் காலங்களில் மேலும் சில அறிவிப்புகளை கூட செய்வார். அல்குர்ஆனில் ஹஜ்ஜுக்கு நடந்தும், மெலிந்த ஒட்டகங்களிலும் வருவார்கள் என்று கூறியுள்ள வசனத்தின்படி நடந்தும், ஒட்டகத்தின் மூலம் மட்டுமே செல்ல வேண்டும்; இனிமேல் விமானத்தில் செல்லக் கூடாது என்றும் முந்தைய காலத்தைப் போன்று ஹஜ்ஜுக்கு சென்ற கணவர் இறந்துவிட்டால் ஊருக்கு வந்து நேரில் சொன்ன பிறகுதான் 'இத்தா' இருக்க வேண்டும் என்று கூறி நபி(ஸல்) அவர்கள் காலத்தில் செல்போன் வசதிகள் இல்லை. ஆதலால் செல்போன் தகவல்களை கேட்டு செயல்படக்கூடாது என்றும் ஃபத்வா அறிவிப்பார். இதனையும் பாவம் இவரை கண்மூடி பின்பற்றும் சகோதரர்கள் ஏற்றுக் கொண்டு செயலாற்ற தயாராகவே உள்ளனர்.

***"நீங்கள் இந்த குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? (47:24)***

***"....ஆழ்ந்து சிந்திக்க வேண்டாமா?... 4:82*** என்ற குர்ஆன் வசனத்தை தம்பிமார்கள் படித்து உணர வேண்டும்.

காலக்கணக்கை அறிந்து கொள்வதற்காகத் தான் சந்திரனை 29 அல்லது 30 நாட்களுக்குள் வளர்ந்து தேய்ந்து போகும் நிலைக்கு மனாஜில் களை ஆக்கியுள்ளான். தமிழ் நாட்டிற்கு ஒரு மன்ஜில் என்றோ, டெல்லிக்கு ஒரு மன்ஜில் என்றோ சவூதிக்கு ஒரு மன்ஜில் என்றோ தனியாக ஏற்படுவது இல்லை.

ஒரு மன்ஜில் தோன்றி அடுத்த மன்ஜில் தோன்றிட சுமார் 23½மணி நேரம் ஆகிறது. எனவே முதல் பிறை 24 மணி நேரம் கொண்ட ஒரு நாளுக்குள் இருக்க முடியுமே அல்லாமல் 2 நாள் வரவே முடியாது. இந்த நிலையில் அண் ணன் முதல் பிறை 3 நாள் இருக்க முடியும் என்று கூறுகிறாரே இது எப்படிச் சாத்தியம் என தம்பி மார்கள் சிந்திப்பார்களா? ஒரே நாளில் படிப்படி யாக ஒவ்வொருவரும் பிறையை சந்தித்து விடுகிறார்கள். இதனை அல்லாஹ்வின் அல்குர் ஆனும் கூறுகிறது. இன்றைய விஞ்ஞான அறிவிய லும் கூறுகிறது. ஏன் P.J.வே முன்பு ஒப்புக் கொண்டார் (1997).

1997ம் ஆண்டு திருவல்லிக்கேணியில் நடை பெற்ற ஓர் மாற்றுமத சகோதரர் கலந்துரை யாடல் நிகழ்ச்சியில் ஓர் இந்து சகோதரர் பிறையை பற்றி கேள்வி கேட்டார். அதில் பதில ளித்த P.J.அவர்கள் பிறையைப் பற்றி விவர மாகவே விளக்கினார். இது ஓர் நாள்காட்டி என்றும் காட்டில் வாழக்கூடிய மனிதன் தேதி தெரியாமல் வாழ்வான். ஆனால் அவன் அந்த பிறையை (சந்திரனின்) மன்ஜிலின் தோற் றத்தை கொண்டு அது எந்த நாளின் பிறை (தேதி) என்று முடிவு செய்ய முடியும் என்று விளக்கிய P.J.அப்பொழுது தெளிவாக இருந் ததால் உண்மையைக் கூறினார்.

அந்த தேதியில் உள்ள C.D.கேசட்டை தம்பி மார்கள் அவரிடம் கேட்டு பெற்று தெளிவு பெறவும். (இதற்கு கூட அவரது திறமையான(?) பதிலைக் கொண்டு மடக்கி விடுவார்)

மேலும் அதே காலகட்டத்தில் அதே திருவல் லிக்கேணி சேக்தாவூது தெருவில் நடைபெற்ற மார்க்க பொதுக்கூட்டத்தில் தலைமை காஜிக்கு அறைகூவல் விடுத்தார். பிறை விஷயத்தில் தலைமை காஜி தவறான முறையை மேற் கொள்கிறார். தவறை திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் எச்சரித்தார். இவ்வாறெல் லாம் பேசிய P.J. அவர்கள்தான் தற்போது தடுமாறிப் பேசுகிறார்.

**TNTJ தம்பிமார்களுக்கு ஓர் வேண்டுகோள்**

***<u>நூறு ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்படும் சூரியன் மற்றும் சந்திர கிரகணங்களை இன்றைய அறிவி யல் நுட்பத்தில் கண்டுபிடித்து கூறமுடியும். ஏனெனில் ஒவ்வொரு கிரகங்களும் அதனதன் பாதைகளில் நீந்திக் கொண்டிருக்கிறது. (36:40)</u>***

கிரகங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன் றும் முந்திக் கொண்டு செல்ல முடியாது என்றும் குர்ஆன் தெளிவு படுத்துகிறது. இதிலி ருந்து கணக்கீடு செய்யலாம் என்று தெளிவாக அறிய முடிகிறது. பிறை எப்பொழுது எந்த ஊரில் எந்த தேதியில் எத்தனை மணிக்கு தோன்றும் என்பதனை இன்றைய அறிவியல் நுட்பத்தில் கண்டுபிடித்து கூற முடியும். கூறவும் செய்கிறார்கள்.

இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறவே முடியாது. வீண் விவாதத்துக்கும் வறட்டு கௌரவத்திற்கு மட்டுமே கூறமுடியும்! அல்லாஹ்வின் மார்க்கத்தில் வாழும் நேர்வழி பெற்ற முஸ்லிம்கள் அறிவியல் நுட்பத்தை ஏற்றுக் கொள்ளவே செய்வார்கள். அல்லாஹ் வின் அல்குர்ஆனில் அறிவியல் புதைந்து கிடக் கிறது. ஆகவே அல்லாஹ் சிந்தனை செய்யவும், ஆராய்ச்சி செய்யவும் கூறுகிறான். P.J.செய்யும் குழப்பங்கள், குளறுபடிகள் அவரது நிலைப் பாட்டை தெளிவு படுத்துகிறது.

இன்ஷா அல்லாஹ் வரக்கூடிய காலங்களில் ஒரே பிறை என்ற நிலை வரத்தான் செய்யும். அப்பொழுது நிச்சயம் வரலாறு இவரை மன்னிக்காது என்பதே உண்மை.

அல்லாஹ் அவருக்கு நேர்வழி காட்ட துஆ செய்வோம்.